# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 230/2012

**பி.சா.2** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 27-01-2026

பெயர் = தங்கமுத்து

**பி.சா.2** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி வாதிகள் தரப்பில் கு.வி.-

(1) எனது தகப்பனார் நலமாக உள்ளாரா என்றால் உடல்நிலை சரியில்லாமல் வாய்பேச முடியாமல் ஒரு கை காலில் பக்கவாதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளார். எனது தகப்பனாருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 76 வயது ஆகும். எனது தகப்பனாரை மருத்துவமனையில் வைத்து சிகிச்சை அளித்தேனா என்றால் சிகிச்சை அளித்தேன், தற்போது வீட்டில் உள்ளார். எனது தகப்பனாருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தேன் என்பதை மருத்துவ ஆவணங்கள் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா இடத்தை பார்வையிட வந்தபோது நான் அங்குஇருந்தேன் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட வந்தபோது, நான் தான் வாதியின் வழக்கறிஞரிடம் பெருத்த வாக்குவாதத்தில் ஈடுபட்டு, தாவா சொத்தை அளக்கவிடாமல் செய்தேன் என்றால் சரியல்ல.

(2) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை படித்து பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். எனது தகப்பனார் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளாரா என்றால் நான் வெளிநாடு சென்றிருந்ததால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அறிக்கையை நான் படித்து பார்த்ததாக சொல்லியுள்ளதால் அதில் எனக்கு ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை உள்ளது. என்ன ஆட்சேபணை உள்ளது என்றால் தாவா சொத்து எங்களுடைய சொத்து. தாவா சொத்து வருவாய் ஆவணங்களில் தெரு என்று வகைப்பாடு செய்யப்பட்டவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், யூடிஆர்

காலத்தில் தவறுதலாக தெரு என்று வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வகைப்பாட்டை எதிர்த்து வருவாய் துறையில் ஏதேனும் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது பெற்றோர் வயதானவர்கள் என்பதால் மேற்படி விவரம் தெரியாமல் இருந்துவிட்டனர். எனது வீடு தாவா சொத்து பக்கத்தில் உள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு எந்த பக்கம் எனது வீடு உள்ளது என்றால் தாவா சொத்துக்கு தெற்கேயும், வடக்கேயும் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் தாவா சொத்திற்கு வடக்கே தெற்கே பிரதிவாதி வீடு என்று குறிப்பிட்டுள்ளதால் எந்த வீட்டில் நான் குடியிருந்து வருகிறேன் என்றால் தாவா சொத்துக்கு தெற்கு பக்கம் உள்ள வீட்டில் குடியிருந்தேன், மேற்படி வீடு இடிந்து விட்டதால் தாவா சொத்துக்கு வடக்கு பக்கம் உள்ள கிழக்கே உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் குடியிருந்து வரும் மேற்படி வீட்டுக்கு வீட்டுவரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரசீதுகள் உள்ளது, தாக்கல் செய்தோமா என்று தெரியவில்லை.

(3) எனது தகப்பனாருக்கு பதிலாக என்னை விசாரிப்பதற்கு நான் நீதிமன்றத்தில் அனுமதி பெற்றேனா என்றால் பெற்றேன். நான் அவ்வாறு அனுமதி எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் மட்டும் தாவாசொத்தை நடைபாதையாக பயன்படுத்தி வருகிறோம் என்று நான் சொல்லியுள்ளதற்கு என்ன ஆவணங்கள் வைத்துள்ளேன் என்றால் பத்திரம் உள்ளது. என்ன பத்திரம் உள்ளது என்றால் முத்துவழிவிட்டான், வீரபத்திரதேவர், ஜெயவள்ளி என்கிற ஜெயராணி என்பவர்களுக்கு முத்துபிள்ளை எழுதிக்கொடுத்த பத்திரம். மேற்படி பத்திரம் 1977 பத்திரமா என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் பி.சா.ஆ. 2 ஆவணத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பி.சா.ஆ.2 ஆவணத்தில் தாவா சொத்து எந்த லக்கச் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாட்சியிடம் பி.சா.ஆ.2 ஆவணத்தை கொடுத்து தாவா சொத்து எந்த இலக்க சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று கேட்டபோது சாட்சி மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து உள்ளது தெரியும், நான் 7ம் வகுப்பு தான் படித்துள்ளேன், அதனால் அதனை படித்து பார்த்து எந்த இலக்க சொத்து என்று காண்பிக்க தெரியாது. மேற்படி ஆவணத்தில் எத்தனை லக்க சொத்துக்களை ஜெயவள்ளி என்ற ஜெயராணி கிரையம் வாங்கியுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

(4) ஜெயவள்ளி என்ற ஜெயராணி கிரையம் கொடுத்த முத்து இருளப்ப பிள்ளை வகையறாவிற்கு மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் எப்படி பாத்தியம் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆவணம் மூலம் ஜெயவள்ளி என்ற ஜெயராணி தான் கிரையம் வாங்கியுள்ளார் என்பதால் எனக்கு எவ்வாறு மேற்படி ஆவணத்தின் மூலம் பங்கு உள்ளது என்றால் முத்துவழிவிட்டான் மூலம் எனது அப்பாவிற்கு பங்கு உள்ளது. முத்துவழிவிட்டான் என்பவர் யார் என்றால் எனது தகப்பனாரின் தகப்பனார். மேற்படி முத்துவழிவிட்டானுக்கும் ஜெயவள்ளிக்கும் என்ன சம்மந்தம் என்றால் வீரபத்திரதேவரின் மகள் தான் ஜெயவள்ளி, மேற்படி வீரபத்திரதேவரின் அண்ணன் தான் முத்துவழிவிட்டான், முத்துவழிவிட்டான் மகன் எனது அப்பா. மேற்படி உறவுமுறைகளை பற்றி எனது தகப்பனாரோ ஜெயவள்ளியோ அவர்களது எதிர்வழக்குரையிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ஜெயவள்ளி கிரையம் வாங்கிய பின்பு எனது தகப்பனார் வகையறாவும், ஜெயவள்ளி வகையறாவும் எப்படி பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பாகம் பிரிக்கப்படவில்லை. பாகம் பிரிக்கப்படவில்லை என்று நான் சொல்லியுள்ளதால் நான் எதன் அடிப்படையில் தாவா சொத்துக்கு வடக்கே உள்ள வீட்டில் குடியிருக்கிறேன் என்றால் வீரபத்திரர் குடும்பமும், எங்கள் குடும்பமும் ஒரே குடும்பம் தான்.

(5) நான் குடியிருந்து வரும் தாவா சொத்துக்கு வடக்கே உள்ள வீடு எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் மேற்படி சொத்து எனது தாயாரின் பெயரில் வாங்கப்பட்ட சொத்து ஆகும். எந்த வருடம் யாரிடம் இருந்து எனது தாயார் மேற்படி வீட்டை கிரையம் வாங்கினார் என்றால் அழகர்சாமி சேர்வை என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார், தேதி வருடம் தெரியாது. தாவா சொத்துக்கு வடக்கே உள்ள வீடு எனது மனைவி கிரையம் வாங்கியது என்ற விவரத்தை எனது தகப்பனார் அவரது எதிர்வழக்குரையிலோ, மேற்படி சொத்து எனது அம்மா கிரையம் வாங்கிய சொத்து என்று நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்தை என்னவாக மால் காண்பிக்கப்படடுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(6) நானும், ஜெயவள்ளியும் பங்காளிகளா என்றால் எனது தகப்பனாருக்கு பங்காளி , எனக்கு அத்தை. நானும், ஜெயவள்ளியும் பேசிக்கொள்வோமா என்றால் பேசிக்கொள்வோம், ஒரே குடும்பமாக உள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை யார் கூறினார்கள் என்றால் நான் தான் சொன்னேன். தாவா சொத்துக்கு வடக்கே உள்ள வீடு எனது தாயாருக்கு கிரையம் பாத்தியம் என்று நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் ஏன் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. எனது தாயாருக்கு பாத்தியம் என்று நான் சொல்வது பொய் என்றும், எனது தகப்பனாருக்கு பூர்விக பாத்தியப்பட்டது என்று நான் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தாவா சொத்துக்கு வடக்கே உள்ள சொத்து எனது தகப்பனாருக்கு எப்படி பாத்தியம் என்று சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(7) எனது நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3 ல் சொல்லியுள்ள 30.09.1999 கிரையப்பத்திரத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி பத்திரத்தில் தாவா சொத்தை என்னவாக நான்குமாலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கு தெற்கே உள்ள இடத்தை தான் 2 ம் வாதி, ஜெயவள்ளியிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் தெற்குமாலில், கிழமேல் பாதைக்கும் தெற்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர எங்கள் வகைறாவுக்கு பாத்தியப்பட்ட கிழமேல் பாதைக்கும் தெற்கு என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 2 ம் வாதிக்கு தாவா சொத்தில் நடந்துபோக உரிமை, வண்டிகள் நிறுத்துவதற்கான உரிமை அனைத்தும் உள்ளது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் 2 ம் வாதிக்கு தாவா சொத்தில் உரிமைகள் உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் நடந்துபோவதற்கு மட்டும் தான் உரிமை உள்ளது, வண்டி நிறுத்துவதற்கான உரிமை இல்லை.

(8) 2 ம் வாதிக்கு சொந்தமான வாகனங்களை தாவா சொத்தில் எனது வீட்டிற்கு முன்னால் நிறுத்துவதற்கு நான் அனுமதி அளிப்பேனா என்றால் எவ்வாறு அனுமதி அளிப்பேன். 2 ம் வாதியின் வீட்டிற்கு கிழக்கே பிரதிவாதியின் வீடு என்று நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதால் மேற்படி வீடு யாருடையது என்றால் என்னுடைய வீடு, மேற்படி வீடு இடிந்துவிட்டது. மேற்படி

வீட்டின் முன்பாக 2ம் வாதி அவருடைய வாகனங்களை நிறுத்தி கொள்ளலாமா என்றால் முடியாது. தாவா சொத்தை பார்த்து தான் 2ம் வாதி தலைவாசலை வைத்துள்ளாரா என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு தான் 2ம் வாதியின் வீடு என்றால் சரிதான். 2ம் வாதியின் வடக்கே உள்ள பாதைக்கு தான் தற்போது பிரச்சனை நடக்கிறது என்றால் சரிதான். வாதி வீட்டை விட்டு வெளியே வந்து தாவா சொத்தில் நடந்து தான் கிழக்கே மேற்கே உள்ள இடங்களுக்கு செல்ல முடியும் என்றால் அவர் இடம் போட்டு வீடு கட்டவில்லை, அதனால் மேற்படி பாதை வழியாக செல்லமுடியாது. மேற்படி வீட்டின் வாசலில் தண்ணீர் தெளித்து கோலம் போடுவதற்கு 2ம் வாதிக்கு உரிமை உள்ளதா என்றால் உரிமை இல்லை.

(9) 2ம் வாதி வீட்டுக்கு வடக்கே உள்ள தாவா சொத்தில் நான் கூழாங்கல்லை போட்டு அடைத்து வைத்துள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும்போதே, 2ம் வாதியை தாவா சொத்தில் புழங்கவிடாமல் கூழாங்கல்லை போட்டு அடைத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கும், நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கும் விரோதமாக உள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கின் மற்ற வாதிகளான மலைச்சாமி, பாலு, காளிமுத்து ஆகியோர்கள் 2ம் வாதியுடன் சேர்ந்து தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு வடக்கேயும் தெற்கேயும் 1,3,4 வாதிகள் வீடு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி 4 வாதிகளும் சேர்ந்து வாகைகுளம் கிராமம் பொது பிரதிநிதியாக தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

(10) 2ம் வாதியை தவிர, மற்ற மூன்று வாதிகளுக்கும் எங்களுக்கும் இடையில் சமரசமாக என்ன பேசி கொண்டோம் என்றால் அவர்களே மேற்படி வழக்கை நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொல்லிவிட்டார்கள். 2ம் வாதியை தவிர மற்ற மூன்று வாதிகளும் நீதிமன்றத்திற்கும், 2ம் வாதியின் வழக்கறிஞருக்கும் நாங்களும் பிரதிவாதிகளும் சமரசமாக பேசிக்கொண்டோம் என்று அறிவிப்பு அனுப்பிள்ளார்கள் என்றால் நாங்கள் வழக்கை பற்றி கேட்டோம், அவர்கள் கையெழுத்து எதுவும் போடவில்லை, நாங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று கூறிவிட்டனர். மேற்படி அறிவிப்பு அனுப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்பாகவே மேற்படி வாதிகளை சாட்சியமாக விசாரிப்பதற்காக மனு

தாக்கல் செய்யப்பட்டவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மனு திரும்பபட்டது, மேற்படி மனுவை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வாதிகள் மூவரையும் விசாரிக்க நாங்கள் தயாராக உள்ளோமா என்றால் தயாராக உள்ளோம்.

வாதிகள் தரப்பு வேண்டுக்கோளுங்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**பி.சா.2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, பிற்பகல் 03.20 மணியளவில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி** -

(11) 2ம் வாதியை தவிர்த்து மற்ற வாதிகளை வழக்கு விசாரணை நிலுவையிலுள்ள போது பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து மேற்படி வாதிகளை மிரட்டியதால்தான் மேற்படி வாதிகள் நீதிமன்றத்திற்கும், 2ம் வாதியின் வழக்கறிஞருக்கும் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை என்று அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட நடைபாதை என்றால் சரியல்ல, UDR சர்வேயில் தெருவாக வகைபாடு செய்யப்பட்டது. தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள பகுதிக்கு செல்ல வேண்டுமானால் 2ம் வாதிக்கு தாவா சொத்தை தவிர வேறு பாதை இல்லை என்றால் அவருக்கு பாதை இல்லை. தாவா சொத்தை 2ம் வாதி உட்பட ஊர்மக்கள் அனைவரும் இன்றைய தேதிவரை பாதையாகத்தான் புழங்கி வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஓ.எஸ்.எண்.225/2012 ல் நான் தரப்பினராக உள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் மேற்படி வழக்கில் ஒரு தரப்பினராக உள்ளாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி வழக்கு சமரசமாக பேசி முடிக்கப்பட்டு வாபஸ் செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது தாத்தா வீரபத்திரரிடம் சமரசம் பேசிய விபரம் எனக்கு தெரியும். வீரபத்திரதேவர் முறைக்கு தாத்தாவே தவிர எனது தகப்பனாரையோ, தாயாரையோ பெற்ற தாத்தா அல்ல என்றால் சரிதான், எனது தாத்தாவின் தம்பி. மேற்படி ஓ.எஸ்.எண்.225/2012 வழக்கில் தாவா வழக்கின் வாதிகளான சுமதி மற்றும் பாலு தரப்பினர்களாக இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

(12) மேற்படி ஓ.எஸ்.எண்.225/2012 வழக்கு தாவா சொத்து சம்மந்தமாக போடப்பட்ட வழக்கா என்றால் மேற்படி தாவா சொத்தில்தான் எங்களுக்கு

கரைமரியாதை நடக்கும். மேற்படி வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு தாவா வழக்கின் 2ம் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாகைகுளம் கிராமத்தில் இரண்டு கோஸ்டிகளாக செயல்பட்டு வருவதால் எங்கள் மீது பல்வேறு வழக்குகளை தாக்கல் செய்துள்ளார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றும், மேற்படி சங்கதிகளுக்கும், 2ம் வாதிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாகைகுளம் கிராம மக்கள் புழங்குவதற்கான பொதுத்தெரு என்றும், அதை 2ம் வாதி உட்பட பொதுமக்கள் அனைவரும் புழங்குவதற்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று பொய்யாக எங்களது எதிர்வழக்குரைக்கு விரோதமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.01.27 18:17:46 +0530